யிருக்கும் பூமிகளை, ஐந்து ஏக்கர், நான்கு ஏக்கர் என்று பிரித்தாவது கொடுத்து வேளாண்மையை ஊக்குவிக்க வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். நிறைய வண்டல் படிந்த மண் அந்தப் பகுதியில் இருக்கிறது. விவசாயிகள் அதை எடுத்துக்கொள்ள அனுமதி கொடுப்பதில்லை. அனுமதி கொடுத்தால் விவசாயத்தைப் பெருக்குவதற்கு வழியாக இருக்கும்.

பவானி ஆற்றிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ள ஒரு சிலருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சிலருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் ஒரே மாதிரியாக விதி விலக்கு அளித்து, பவானி ஆற்றிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கல்வி பற்றியும் இந்த அறிக்கையில் குறிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் உயர்நிலைப் பள்ளிகள் கிராமப் பகுதிகளில் அதிகப்படியாக இருந்தும், இட வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப் பட்டு வருவதையொட்டி, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஜெனரல் ஃபண்டிலிருந்து குறைந்தது பத்தாயிரம் ரூபாயாவது கொடுக்க வழிவகை செய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (உ) பேரவையின் பிற்பகல் கூட்டம்

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :* இன்று காலை நடந்த அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டபடி, இப்பேரவையின் கூட்டம் இன்று பிற்பகல் 1-30 மணிக்கு முடிந்து, மீண்டும் மாலை 3-30 மணிக்குத் தொடரும் என்பதை இப்பேரவைக்கு நான் அறிவிக்கிறேன்.

## 3. 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. பி. ஜயராஜ் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நமது புதிய அரசு கொண்டுவந்திருக்கிற இந்த வரவு-செலவுத் திட்டத் தின்மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்ல நான் முன் வருகிறேன். புதிதாக அமைந்திருக்கக்கூடிய இந்த அரசாங்கம், ஏழை எளிய மக்களுக்கு நல்ல வாய்ப்புக்களைக் கொடுத்து, அவர்களுடைய வசதிகளைப் பெருக்கி, அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை இந்த மாநிலத்தில் ஏற்படுத்தும் என்று தமிழகத் திலே இருக்கும் மக்களெல்லோரும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அதே நேரத்தில், புதிதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த பட்ஜெட்டில், நில வரியைப் புன்செய் நிலங்களுக்கு ரத்து